# ச்சோஸென் ஜெனெரேஷன்

# CHOSEN GENERATION

(Tamil - Monthly Magazine)

செடி : 10 மலர் : 4 Plant : 10 Flower 4

பிப்ரவரி 2025 / February 2025

ஆண்டு சந்தா ரூ.50/- Annual Subscription Rs.50/-

தனிபிரதி விலை ரூ.5/-



**அவசர ஜெப உதவிக்கு**

ஊழியரிடம் எந்த நேரத்திலும் நேரிடையாக தொடர்பு கொள்ள மொபைல் போன் எண்:

**94433-46119**

# ஆசிரியர் மனம்

பிரியமான கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துதல் கூறி எழுதும் மடல். நலம். நலமறிய அவா. நலமுடன் இருப்பீர்கள் என நம்புகிறேன்.

2025 ஆண்டு துவங்கி ஒரு மாதத்தை கடந்து இரண்டாம் மாதத்திற்குள் பிரவேசிக்க தேவன் கிருபை பாராட்டினார். இந்த புதிய ஆண்டில் புதிய நன்மையையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுள்ளோம். அது தொடர்ந்து இவ்வருடம் முடிய வருவதாக ! வருட வாக்குத்தத்தப்படி “கர்த்தரின் கை குறுகிப் போவதில்லை. கர்த்தரின் வார்த்தைப்படி நடக்குமோ அது இன்றே இப்பொழுதே நடக்கும் என்பதை “நீ” காண்பாய் என்பது போல் (எண்.11:23) தொடர்ந்து இவ்வருடத்தில் காண்போமாக.

வாசக நண்பர்களுக்கு பத்திரிகையை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக இப்பத்திரிகை பிரதி மாதமும் 1000 எண்ணிக்கை விநியோகிக்கப்படுகிறது. ஆனால் அதற்கு வாசகர்களால் அனுப்பப்படுகிற சந்தா விரல்விட்டு எண்ணுகிறது போல் என்னுடைய சபை விசுவாசிகள் 3 பேரும், வெளியிலிருந்து மாதா மாதம் காணிக்கை அனுப்புகிறார்கள். அதுவும் 6 (அ) 7 பேர் 50, 100, 200 என்று அனுப்புவார்கள். மொத்தத்தில் RNI Registration Regd. Magazine-க்கு Postal Concession நிறுத்தப்பட்டது. எனவே பத்திரிகைக்கு ஸ்டாம்பு ஒட்டும் செலவு அதிகம் 0.25 பைசாக்கு பதில் ரூ.2/-லிருந்து ரூ.4/- வரை செலவாகும். எனவே பிரயோஜனப்படுத்தி கொள்வதற்கு ஏதுவாக அனுப்பலாம் என்று தீர்மானித்துள்ளேன்.

வாஞ்சையுள்ள நபர்கள் அறிந்து அனுப்பி வைக்கலாம் என்று யோசித்துள்ளேன். இம்மாதம் எப்பொழுதும் அனுப்புவது போல் அனுப்புகிறேன். உங்கள் விருப்பத்தை அறிய விரும்புகிறேன். Whatsapp-ல் Msg. அனுப்பினால் கூட போதும். இதுவரை எதையும் எதிர்பாராமல் இலவசமாகத்தான் அனுப்புகிறேன். இனியும் அனுப்புவேன்.

ஜெபியுங்கள் ! ஜெபிக்கிறேன். மீள இப்பகுதியில் சந்திக்கும் வரை தேவகிருபையும் சமாதானமும் யாவருடனும் இருப்பதாக.

இப்படிக்கு,

கிறிஸ்துவின் பணியில் உங்களின் அன்பு சகோதரி

Sarah Vimal

(சாரா விமல்)

# அழைப்பின் மேன்மையை இழக்காதீர்கள்

எனக்கருமையான சகோதரனே ! சகோதரியே ! 'அழைப்பின் மேன்மையை இழக்காதீர்கள்' என்ற செய்தியை பார்ப்போமாக. "நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும் நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில் .......... தங்களுடைய ஆதிமேன்மையை காத்துக்கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும் மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். (யூதா 5, 6)

மேற்படி வசனத்தை தொடர்ந்து நாம் செய்தியை கவனிப்போமாக.

## தூதர்கள்

தேவதூதர்களுக்கு நல்லதொரு ஸ்தானத்தை கொடுத்து காப்பாற்றுகிற தூதனாக, அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூபீனாக தேவனுடைய பர்வதத்தில் வைத்தார். (எசே. 28:14,13)

அழைக்கப்பட்ட (ஆனால்) அழைப்புக்குப் பாத்திரவானாய் நடக்காமல் தனக்கு கொடுத்த மேன்மையை இழப்பதற்கு காரணமாகிய பெருமையும் மேட்டிமையும் அவனுக்குள் வந்தது. அதினால் அவன் தள்ளப்பட்டான்.

## சாத்தானுக்கு செவிக்கொடுத்தல்

ஆதிதகப்பனாகிய ஆதாமை தேவசாயலாக தேவன் சிருஷ்டித்தார். உலகம் முழுவதும் ஆண்டுகொள்ளும்படி கூறினார். (ஆதி 1: 27,28)

ஆதாம் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று கண்டு ஏவாளை ஆதாமின் விலா எலும்பிலிருந்து உண்டாக்கினார். ஆனால், அவளோ ஆதாமை விட்டு தனிமையாக சென்று சாத்தானின் வஞ்சகப் பேச்சுக்கு செவி கொடுத்து பாவத்துக்குள்ளானாள். தனக்கென்று கொடுக்கப்பட்ட புருஷனாகிய ஆதாமையும் பாவத்துக்கு உள்ளாக்கினாள், பாவம் வந்ததினிமித்தம் ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டப்பட்டார்கள். (ஆதி 2:18,19, 3:17, 24) அவனுக்கு கிடைத்த அருமையான சிலாக்கியத்தை

விட்டு விரட்டப்பட்டதற்கு காரணம் சாத்தானுக்கு செவி கொடுத்ததே.

## உலகத்தின் பார்வை

சோதோம் கொமோரா பட்டணம் அழிக்கப்படுவதற்கு முன்னே தேவ தூதர்களால் லோத்தும் அவன் மனைவியும் அந்த ஊரை விட்டு வெளியே கொண்டுபோய் விடப்பட்டார்கள். உன் ஜீவன் தப்ப ஓடிப்போ என்றார். ஆனால், லோத்தின் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூணாக மாறிப் போனாள். (ஆதி 19:17,26) தேவன் அவர்களுக்கு ஜீவன் கொடுக்க விரும்பி பின்னிட்டுப் பாராதே என்கிற நிபத்தனை கொடுத்தாலும் உலகத்தின் இச்சை லோத்தின் மனைவியை இழுத்ததால் உப்புத்தூணாய் மாறினாள்.

## உணவு

ஒருவேளை போஜனத்துக்காக தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாக இராதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள். (எபி.12:16) புசிப்போம் குடிப்போம் நாளைக்கு சாவோம் என்கிற சமுதாயமாக இன்றைக்கு உலகத்தின் மக்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் கிறிஸ்துவ மக்களே தேவனுடைய அழைப்பையும், மேன்மையையும் உணராதபடி வாழ்ந்து வருகிறார்கள் (ஏசா. 22:13). ஏசாவுக்கு கிடைத்திருந்த சேஷ்டபுத்திர பாகம் எனக்கு என்னத்திற்கு என்று சிவப்பான கூழின் மீது ஆசை வைத்து அதை விற்றுப் போட்டான். அவனுக்கு கிடைத்த மேன்மையை இழந்தான். ஆபிரகாம், ஈசாக்கு, ஏசாவின் தேவன் என்பதற்குப் பதிலாக ஆபிரகாம், ஈசாக்கு, <u>யாக்கோபின்</u> தேவன் என்று கூறும்படியாக தேவனாலேயே அவன் பெயர் உச்சரிக்கப்படாதபடிக்கு விடுபட்டது. இயேசு கிறிஸ்துவின் வம்சாவழி பட்டியலில் கூட அவன் பெயர் இடம் பெறாமல் போய்விட்டது. (மத்.1-ஆம் அதிகாரம்) தேவன் வைத்த (அழைப்பு) மேன்மையை ஒரு சாதாரண கூழுக்காக இழந்து விட்டான்.

## துர்ச்செய்தி

இன்றைய தினம் கிறிஸ்துவ மக்களிடம் மலிந்து காணப்படுவது வேண்டாத சம்பாஷனையைப் பரப்புவதுதான். மற்றவர்களை குறை கூறி தங்களை நீதிமான்களாக்கிக் கொள்ளுகிறவர்கள் அதிகமாய் இருக்கிறார்கள். கானான் தேசத்தை வேவு பார்க்கும்படியாக கோத்திரத்திற்கு ஒருவர் வீதம் அனுப்பப்பட்டபோது நூனின் குமாரன் யோசுவா, எப்புன்னேயின் குமாரன் காலேப்-ஐத் தவிர மற்ற கோத்திர

பிரபுக்களும் அவிசுவாச செய்தியை பரப்பினார்கள். அவர்களை மேற்கொள்ள முடியாது என்றும் அவர்கள் இராட்சதர்களைப் போல் இருக்கிறார்கள். அவர்களுடைய பார்வையில் நாம் வெட்டுக்கிளிகளை போல் இருக்கிறோம் என்று துர்ச்செய்தியை பரப்பினார்கள். நற்செய்தியை பரப்பின இருவர் மாத்திரம் கானான் தேசத்துக்குள் பிரவேசித்தார்கள். மற்றவர் அழிந்து ஒழிந்து போனார்கள். துர்ச்செய்தியைப் பரப்பினதினிமித்தம் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை அடையாமல் போனார்கள். கிடைக்க வேண்டிய சுதந்திரம் கிடைக்காமல் போனது.

## கீழ்ப்படியவில்லை

நூற்றிருபத்தேழு நாடுகளை அரசாண்ட அகாஸ்வேரு ராஜாவின் மனைவியும் பட்டத்து ராணியுமான வஸ்தி தனக்குரிய ராஜ மேன்மையை தன் கீழ்ப்படியாமையினிமித்தம் இழந்தாள். மகாரூபவதியாயிருந்த ராஜஸ்திரீயாகிய வஸ்தியின் சௌந்தர்யத்தை ஜனங்கள் பார்க்கும்படி ராஜகிரீடம் தரிப்பிக்கப்பட்டவளாக அவளை ராஜாவுக்கு முன்பாக அழைத்துவர வேண்டுமென்று ஏழு பிரதானிகள் மூலமாக கட்டளையிட்டான் (எஸ். 1:9-12). அவளோ வரமாட்டேன் என்று கூறினாள். அவளுடைய கீழ்ப்படியாமையினிமித்தமும் அழைப்பை உதாசினப்படுத்தியதினிமித்தமும் தன் ராஜமேன்மையை இழந்தாள். கீழ்ப்படிதலான எஸ்தர் அவளுடைய ஸ்தானத்தில் பட்டத்து ஸ்திரீயானாள். (எஸ். 2:17)

## சுயம்

இராஜாவாகிய சவுல் அமலேக்கியரிடம் யுத்தம் பண்ண புறப்பட்ட போது கர்த்தர் சாமுவேலைக் கொண்டு வெளிப்படுத்திய காரியமானது என்னவெனில், அவன்மேல் இரக்கம் வைக்காமல் புருஷரையும் ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய் என்றார். (I சாமு 15:3). ஆனால், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும் ஆட்டுக்குட்டிகளையும் நலமான எல்லாவற்றையும் அழித்துப் போட மனதில்லாமல் தப்பவைத்து அற்பமானவைகளும், உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டார்கள். (I சாமு 15:9). மேலும் தன் சுயவிருப்பப்படி கர்த்தருக்கு பலியிடும்படி நலமானதை தப்புவித்ததாக காரணம் காட்டினான். (I சாமு 15:15). இதனால் கர்த்தர் சவுலை ராஜாவாக்கினது குறித்து மனஸ்தாபப்பட்டார். அவனுடைய

ராஜ்யபாரமும் பறிப்போனது.

## பயம்

ஒரு மனுஷனுக்கு பயம் இருந்தாலே தேவனுடைய மேன்மையை அடைய முடியாமல் போய்விடும். அதுபோன்று தட்டிக் கழிக்கும் எண்ணமுள்ளவர்களிடமும் தேவன் பிரியமாயிருப்பதில்லை.

எலியாவை தேவன் வல்லமையாக எடுத்துப் பயன்படுத்தினார். ஆனால், யேசபேல் என்கிற ஸ்திரீக்கு பயந்து போய் தன்னை ஒளித்து கொண்டான். நான் சாக வேண்டும் போதும் கர்த்தாவே நான் ஒருவன் மாத்திரம்தான் உள்ளேன். என் பிராணனையும் வாங்க வகை தேடுகிறார்கள் என்றான். அவனுக்குக் கிடைத்த அழைப்பையும், மேன்மையையும் உதாசீனப்படுத்தி, தட்டிக்கழிக்க முனைந்தான். அவனுடைய ஸ்தானத்தில் எலிசாவை தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணும்படி கர்த்தர் கட்டளையைக் கொடுத்தார். எலியா தன் மேன்மையை இழந்தான். (I இரா. 19:1-16).

## அசட்டு தைரியம்

மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்து கன்னிகைகளில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்.

புத்தியில்லாதவர்கள் தீவட்டியை மட்டும் எடுத்து வந்தார்கள். எண்ணெய்யை கொண்டு வராமல் தைரியமாக அசட்டு தைரியத்துடன் கூடிய விசுவாசத்துடன் வந்துள்ளார்கள். தீவட்டி அணையும் போது பார்த்துக் கொள்ளலாம். கடன் வாங்கி கொள்ளலாம். (அ) தீவட்டி அணையும் முன்பு (தேவன்) மணவாளன் வந்து விடுவார் என்கிற நம்பிக்கை (அ) தன்னுடன் எண்ணெய்யுடன் வந்த ஐந்து கன்னிகைகளை நம்பி வந்திருக்கலாம். தீவட்டி அணையும் நேரத்தில் உடன் இருக்கும் 5 கன்னிகைகள் எண்ணெய் கொடுக்காமல் போய்விடுவார்களா ? என்கிற நம்பிகையுடன் வந்துள்ளார்கள். இவர்கள் எண்ணெய் வாங்கப் போகிற சமயமாக பார்த்து மணவாளனும் வந்துவிட்டார். கதவும் அடைக்கப்பட்டது. பாவம் வெளியே நிற்கும் நிலை. (மத்தேயு.25:1-10)

பாருங்களேன் ! இன்றும் குருட்டு நம்பிக்கை, அசட்டு தைரியம், மனிதர்களை நம்பி வாழ்தல், தேவன் வரும்போது பார்த்துக் கொள்ளலாம்

என்று நினைக்கிற ஜனங்கள். நானும் ஆலயத்திற்கு போனேன் என்று ஏதோ ஒரு விசுவாசத்தில் போகிறார்கள். ஆனால் இழப்பைப் பற்றி யோசியாதிருக்கிறார்கள்.

எனக்கருமையான சகோதரரே ! சகோதரியே ! “அழைப்பின் மேன்மையை இழக்காதீர்கள்” என்கிற தலைப்பில் கொடுக்கப்பட்ட செய்தியை வாசித்தீர்கள். பார்த்தீர்களா ! தேவன் கொடுத்த அழைப்பின் மேன்மையை இழந்ததற்கான காரியங்கள். 1) தேவதூதர்கள் மேட்டிமையானதினாலும் கீழ்ப்படியாததினாலும் ஆதிமேன்மையை இழந்து தள்ளப்பட்டார்கள். 2) ஆதாம், ஏவாள் சாத்தானுக்கு செவி கொடுத்ததால் பாவம் உட்பிரவேசித்து ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டப்பட்டு தேவ மகிமையை இழந்தார்கள். 3) லோத்தின் மனைவி தான் விட்டு வந்த ஊரை திரும்பிப் பார்த்து உப்புத் தூணாய் மாறிப் போனாள். 4) ஏசா உணவுக்கு முக்கியத்துவம் அளித்து சேஷ்ட புத்திர பாகத்தை இழந்தான். 5) துர்ச் செய்தியை (அ) வதந்தியைப் பரப்பி இஸ்ரவேலர் கானான் தேசத்தை இழந்தார்கள். 6) கீழ்ப்படியாமல் போனதால் ராஜமேன்மையை வஸ்தி இழந்தாள். 7) பயம் வந்ததால் தனக்கு கொடுத்த மேன்மையை தட்டிக் கழித்துச் சென்ற எலியாவைப் பார்த்தோம். 8) சுயமாக தேவனுக்கு பலியிட நினைத்து தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் சென்ற சவுல் ராஜா, ராஜ்யத்தை இழந்தான். 9) குருட்டு நம்பிக்கையும், மனிதர்களின் மேல் விசுவாசம் வைத்து அசட்டு தைரியத்துடன் கூடிய விசுவாசத்தினால் வெளியே தள்ளப்பட்ட (அ) கைவிடப்பட்ட ஐந்து கன்னிகைகளைப் பற்றி பார்த்தோம். ஆம். கர்த்தருடைய பிள்ளைகளே ! தேவன் அழைத்த அழைப்பையும் மேன்மையையும் பாருங்கள். நீங்கள் அதை இழந்து போகாதபடிக்கு பார்த்துக் கொள்ளுங்கள். கடைசியாக ‘பணம்’, இது தேவைதான். ஆனால் பண ஆசை இருக்கக்கூடாது. ‘பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கிறது’. (தீமோ. 6:10) பண ஆசை வந்த யூதாஸ் போல் தேவனை விட்டு போய் விடக்கூடாது. இதுவும் மிக முக்கியமான ஒன்றாகும். நீங்களே உங்களை சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளுங்கள். ஆமென் ! அல்லேலூயா !

**இப்பத்திரிக்கை உங்களுக்கு பிரயோஜனமாய் இருக்குமானால் Whatsapp – லோ / கடிதத்திலோ தெரிவிக்கவும். தொடர்ந்து அனுப்ப ஏதுவாய் இருக்கும்**

**Whatsapp எண். 9443346119**



# கண்டவைகளும் கேட்டவைகளும்



என் பெயர் ரோகிணி, என் மகனுக்கு வயிற்று வலி வருவதுண்டு. இம்முறை பயங்கர வலியினால் துடித்தான். நீ ஆலயத்ததிற்கு போகிறாயே! ஜெபிக்கிறாயே! ஏன் எனக்கு சுகமாகவில்லை என்றான். என்னை தவிர இரட்சிப்பை யாரும் என் வீட்டில் பெறவில்லை. (அதினால் எனக்கு தடையை உண்டு பண்ணுவார்கள்) என் மகன் வலி தாங்க முடியாமல் நான் சாகப் போகிறேன் என பேசினான். நான் இந்த இரவு வேளையில் பாஸ்டரை தொந்திரவு செய்யக் கூடாது என்று எண்ணி, முன்பு சபைக்கு சென்றபோது ஜெபித்து கொடுத்த ஜெப எண்ணெயை வயிற்று பகுதியிலும் தலையிலும் தேய்த்து தண்ணீரில் சில சொட்டு விட்டு குடிக்க கொடுத்தேன். என்ன ஆச்சரியம் என்றோ ஜெபித்து கொடுத்த ஜெப எண்ணெயில் தேவன் அற்புதத்தை செய்து சில நிமிடங்களிலேயே முழுமையாக சுகமானான். தேவனுக்கு மகிமை உண்டாவதாக. தேவன் பாஸ்டரிடம் இருந்து அற்புதத்தை செய்த படியால் இயேசுவை ஏற்றுக் கொள்ள இயலாத என் மகன் வாயிலும் இயேசு பெரியவர் என்பதை அறிக்கை செய்ய வைத்தார். ஆமென். அல்லேலுயா.

சகோதரி. **ரோகிணி** - நாய்க்கனேரி.

## தாங்கினவர்

இந்த ஆண்டு முழுவதும் எந்த பெலவீனமும் அணுகாதபடிக்கு பார்த்து கொண்டது மாத்திரல்லாமல் தேவன் ஆலயத்திற்கு ஒரு வாரமும் தவறாமல் பங்கு பெற செய்தது மாத்திரமல்லாமல் ஆலயம் சுத்தம் செய்ய தொடர்ந்து வரவும் பெலன் கொடுத்த தேவனுக்கு நன்றி. மேலும் எல்லாருடைய வற்புறுத்தலின் பேரில் மருத்துவமனைக்கு போய் Checkup பண்ணினேன். அந்த டாக்டரிடம் ஏதாவது வியாதி உண்டா என்று கேட்டேன். பாட்டி உங்களுக்கு B.P.யோ, சுகரோ (Diabetes) இல்லை என்று அனுப்பிவிட்டார்கள். இயேசப்பா பற்றி சாட்சி கூறி வந்தேன். தேவனுக்கே மகிமை.

சகோதரி. **பியுலா** - மூஞ்சூர்பட்டு.

என் பெயர் சங்கீதா, என் மூத்த மகளுக்கு B.Sc. Nursing கிடைக்கவில்லை. மிகவும் சோர்ந்து போய்விட்டாள். Training apply

பண்ணும் முன்பே, தேவன் ஊழியர் மூலம் பேசிய தீர்க்கதரிசன வார்த்தையானது பிள்ளைகளின் மேற்படிப்பிற்காக என்ன செய்வேன். பணவசதி இல்லையே என்று அங்கலாய்க்கிற சகோதரியே உன் தேவைகள் சந்திக்கப்படும். நீ விரும்புகிறபடியே ஆகும் என்றார். B.Sc. Nursing அரசாங்கத்தில் கிடைக்காதபோது தேவன் தனியார் கல்லூரியில் கிடைக்கச் செய்தார். ஆனால் பணம் செலுத்த வேண்டிய கடைசி நாளும் வந்தது. மகளோ சோர்ந்து போனாள். நானோ ஊழியரை கொண்டு பேசின தேவ வார்த்தையை நம்பி ஜெபித்து வந்தேன். திடீரென கல்லூரியிலிருந்து அழைப்பு வந்தது. போனபோது முன்பின் தெரியாத ஒருவரை எழும்பி படிக்க வைத்த தேவனுக்கு நன்றி. தற்போது பணியில் சேர கிருபை பாராட்டினார். தேவனுக்கு மகிமை. ஜெபித்த பாஸ்டர் அவர்களுக்கு நன்றி.

சகோதரி. **சங்கீதா** - வேலூர்.

## பொருத்தனையின் தேவன்

என் பெயர் லிசியா. அரசு மருத்துவமனையில் Head Nurse ஆக திருவண்ணாமலையில் பணிபுரிகின்றேன். என் தேவனிடம் ஜெபித்தேன். கர்த்தாவே தினந்தோறும் வேலூர் - திருவண்ணாமலை (Up&down 150 kms) போய் வருகிறேன். எவ்விதமான பெலவீனம் அணுகாதபடி காத்து கொண்டால் சாட்சி கொடுப்பேன் என்றேன். அதுபோன்று Medical Leave கூட எடுக்காதபடி தொடர்ந்து வேலைக்கும் ஆலயத்திற்கும் போகவும் உதவி செய்தார். மேலும் தேவனிடம் தேவனே என்னை Free Counsellingல் Vellore Post-ல் திரும்பி வரச்செய்தால் நான் என் பொருத்தனையை செய்வேன் என்று ஜெபித்து வந்தேன். அதே போன்று நான் வேலூரில் மாற்றம் கிடைக்க செய்தார். என் பொருத்தனை படி Church Anniversaryன் போது பங்கு பெற்ற யாவருக்கும் ஆகாரம் கொடுக்க கிருபை பாராட்டினார். பொருத்தனையை கேட்டு பதில் தந்த தேவனுக்கு நன்றி. நம் மனவிருப்பத்தை நிறைவேற்றுவர் (சங். 20:4). தேவனுக்கே மகிமை,

சகோதரி. **லிசியா ஜோசப்** - வேலூர்.

## 2025 பிப்ரவரி மாதத்திற்கான வாக்குத்தத்தம்

*“என்னை நோக்கி கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்திரவு கொடுத்து, நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்..”*

(எரே. 33 : 3)

# தேடுங்கள் கண்டடைவீர்கள்

(கீழே கொடுக்கப்பட்ட கேள்விகள் யாவும் II கொரிந்தியர் **1** முதல் **13** வரையுள்ள அதிகாரங்களிலிருந்து தொடுக்கப்பட்டவை)

1. இயேசு கிறிஸ்து நமக்குள் இருக்கிறார் என்று எப்படி அறியலாம் ?
2. எதற்கு அதிகாரிகளாயிராமல் எதற்கு சகாயராய் இருந்தார்கள் ?
3. பலவீனம் நீங்க எத்தனை முறை பவுல் விண்ணப்பம் பண்ணினான் ?
4. எந்த பட்டணத்தில் பவுலுக்கு கதவு திறக்கப்பட்டது ?
5. பவுல் அப்போஸ்தலனின் குறைவை யார் நிறைவாக்கினார்கள் ?
6. யாருடைய நீதி என்னென்றைக்கும் நிற்கும் ?
7. கிருபை எப்படி பெருகும் ?
8. காவலில் இருந்து எப்படி தப்புவிக்கப்பட்டான் ?
9. இஸ்ரவேலர் யார் முகத்தை பார்க்க முடியாமல் இருந்தார்கள் ?
10. எங்கே குடியிருக்க விரும்புகிறோம் ?
11. யார் உத்தமனல்ல. யார் உத்தமன் ?
12. எங்கே வந்தபோது பயங்கள் வந்தது ?
13. நாம் ஐசுவரியவான்களாவதற்கு இயேசு என்னவானார் ?
14. அப்போஸ்தலர் வாய் எங்கே, யாருடன் பேச திறந்திருக்கிறது ?
15. எந்த விதத்தில் உதவி செய்ய அப்போஸ்தலர்கள் கேட்டார்கள் ?

## சென்ற இதழின் கேள்விகளுக்கு சரியான விடைகள்

1. I கொரி 14 : 22
2. I கொரி 6 : 18, 10:14
3. I கொரி 15 : 14
4. I கொரி 7 : 29
5. I கொரி 13 : 1
6. I கொரி 8 : 11
7. I கொரி 12 : 24
8. I கொரி 9 : 5
9. I கொரி 11 : 14
10. I கொரி 10 : 8
11. I கொரி 14 : 27, 29
12. I கொரி 7 : 8
13. I கொரி 12 : 3
14. I கொரி 8 : 8
15. I கொரி 11 : 26

## கடந்த மாத இதழுக்கு சரியான விடையளித்தவர்கள்

### சகோதரிகள்

1. Sr. Beryl Baskar - Padappai
2. Sr. Hepziba Thomas - Padappai
3. Mrs. Jeyaseeli Jeyaraj - Trichy
4. Sr. Mercy Goinath - Kapadi
5. Mrs. Annie Inbanayagam-Tuticorin
6. Sr. Alice Augustine - Bagayam
7. Sr. Beulah John - Bagayam
8. Sr. Shekina Nallamuthu - Vellore
9. Sr. Sudha - Voorhees College, Vellore
10. Sr. M. Nadhiya, - Voorhees College, Vellore
11. Sr. Preethi - Otteri
12. Sr. Gnanakalai Arasi - Voorhees College, Vellore

### சகோதரர்கள்

1. Bro. Abraham - Vellore
2. Bro. Yesudoss - Vellore
3. Bro. C. Edward - Vellore
4. Bro. Godwin Premkumar - Voorhees College, Vellore

---

## ஆராதனை நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காலை தியானம் | ஒவ்வொரு 1 ஆம் தேதி காலை 5 am – 6 am |
| பிரதி ஞாயிறு ஆராதனை | 9 am – 11.30 am |
| பிரதி செவ்வாய் | ஊழியருடன் ஒரு மணி நேர ஜெபம் 7 pm – 8 pm |
| பிரதி புதன் | வேதபாடக் கூட்டம் 7.30 pm – 8.30 pm |
| பிரதி வெள்ளி | சகோதரிகள் கூட்டம் 10.00 am – 12.00 noon |
| 2வது சனிக்கிழமை | உபவாசக் கூட்டம் 10.00 am – 2.00 pm |
| 3வது வெள்ளிக்கிழமை | முழு இரவு ஜெபம் 10.00 pm – 2.00 am |
| 4வது சனிக்கிழமை | காத்திருப்புக் கூட்டம் 7.00 pm – 8.30 pm |

## உங்கள் கவனத்திற்கு

**Website : www.https.//cgavlr.org**

**Youtube Channel :**

**Cga Church live stream**

Regd. under Newspaper RNI No.TNTAM/2015/66320 & Posting under / Book Pack of Containing Periodicals with RNI

# செய்திச் சிதறல்

1. நாளை முக்கிய அறிவிப்பு : முதல்வர் ஸ்டாலின் சஸ்பென்ஸ்.
2. இ.பி.எஸ். மீது வழக்குப்பதிவு செய்யலாம் : விசாரணைக்கு ஒத்துழைக்க ஐகோர்ட் உத்தரவு.
3. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 41 இந்திய மீனவர்கள் விடுவிப்பு.
4. இராமநாதபுரம் பகுதியில் எலக்டரிக் ஸ்கூட்டர் தீப்பற்றி எரிந்த சம்பவம்.
5. டெல்லியில் ஆம் ஆத்மி அரசு ரூ. 382 கோடி ஊழல். காங்கிரஸ் குற்றச்சாட்டு.
6. மதக்கலவரத்தை ஏற்படுத்தும் செயல்பாடு - எம்.பி. நவாஸ் கனிக்கு அண்ணாமலை கண்டனம்.
7. மஹாராஷ்டிராவில் வதந்தியால் ஏற்பட்ட துயரம் - இரயில் மோதி 11 பேர் உயிரிழப்பு.
8. நெல் ஈரப்பதம் குறித்து தஞ்சையில் மத்திய குழுவினர் ஆய்வு.
9. சத்தீஸ்கர் போலீஸ் என்கவுன்டரில் 16 நக்சல்கள் கதை முடிந்தது.
10. டெல்லியில் நாட்டின் முதல் மின்சார 'ஏர் டாக்சி' பிர்லா நிறுவனம்.
11. பங்கு சந்தையில் இந்தியா பெரும் வீழ்ச்சி ஒரே நாளில் ரூ8.70 லட்சம் கோடி அவுட்.
12. கேரளாவில் 3வது முறையும் மா.கம்யூ. ஆட்சிக்கு வரும்.
13. சொத்து தகராறில் ஒருவர் சுட்டுக் கொலை.
14. காஷ்மீரில் ஓட்டுப்பதிவு நாளில் விளம்பரம் வெளியிட கட்சிகளுக்கு தடை.
15. நடிகர் விஜய் படத்தயாரிப்பாளர் வீட்டில் ஐ.டி. ரெய்டு.
16. தார்வாட் வங்கி நிதி நிறுவனங்களுடன் போலீஸ் கமிஷனர் ஆலோசனை.
17. கோலார் மாவட்டத்துக்கு ரூ.1000 கோடியில் மக்கள் நல திட்டங்கள்.

Pl. Contact : **Rev. Dr. VICTOR VIMAL / Mrs. SARAH VIMAL**
CHOSEN GENERATION ASSEMBLY
P.O. Bag No. 208, CGA Church Street, (Otteri Post Office Street)
Victor Lane, Otteri, Vellore - 632 002.Tamil Nadu, S. India.

Owned and Published by Mrs. Sarah Vimal Published from
97, Church Street, Govindaraj Nagar, Bagayam, Vellore - 632002. Tamilnadu. South India.
Printed by Mrs. R. Shanthi, Printedat Unity Printers, Velapadi, Vellore - 632001.
Editor : Mrs. Sarah Vimal